**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 589/2025 PW- 4**

Name : Shanmugam
Father / Husband name : Selvaraj
Village : Singanoor
Age : 42
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 25.03.2026.

Accused absent. Petition filed u/s. 317 Crpc filed and allowed. APP absent. Defence Counsel present. Witness Identified by HC248-Olakkur Ps.

**முதல் விசாரணை**

நான் மரவெட்டும் வேலை செய்து வருகிறேன். அ.சா. 2 சிவகுமார் என்பவரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்தை நான் 23.12.2024 அன்று காலை 08.00 மணியளவில் கோனேரிகுப்பத்தில் உள்ள welcome city அருகே நான் எனது நண்பர் ஜெயகுமார் என்பவரை பார்க்க சென்ற போது சிவகுமார் என்பவரிடம் பேசிக்கொண்டு இருந்தேன். அப்போது ஒலக்கூர் போலிசார் சண்டை வழக்கு சம்மந்தமாக விசாரித்து மேப் போட்டு எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். எனக்கு முன்பாக சிவகுமார் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். ( **பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா. ஆ. 5 ஆக குறியிடு செய்யப்படுகிறது**).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது சொந்த ஊர் சிங்கனுார் என்றால் சரிதான். எனக்கு கோனேரிகுப்பம் அருகே நிலம், வீடு கிடையாது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு எதற்காக சென்றேன் என்றால்

மரவெட்டுவது சம்மந்தமாக ஜெயகுமாரை பார்க்க எனது ஊர்காரர் செல்வராஜ் என்னை அழைத்து சென்றார். செல்வராஜ் என்பவர் மரவெட்டும் agent என்றால் இல்லை, மரவெட்டும் வேலை இருந்தால் என்னிடம் சொல்லுவார். நான் யார் தொப்பில் மரவெட்ட சென்றேன் என்றால் தெரியாது, அது எனது முதலாளிக்கு தான் தெரியும். நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதன் குற்ற எண், சட்டப்பிரிவு என்னவென்றால் நினைவு இல்லை. என்னிடம் கையொப்பம் வாங்கிய போலிசாரின் பெயர், பதவி என்னவென்றால் தெரியாது, காக்கி சட்டை போட்டு இருந்தார்கள். இவ்வழக்கின் புகார்தாரர் ஜெயகுமார் எனது நண்பர், அவர் வழக்கறிஞர் என்றால் சரிதான். எந்த தேதியில் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் 23.12.2024. சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், நேரத்தில் போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கி என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா. 1 எனக்கு வேண்டியவர் என்பதால் ஒலக்கூர் காவல் நிலையத்தில் வெற்று வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாக அ.சா. 1 சொன்னதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவகுமார் எனக்கு நணபரா என்றால் இல்லை, தெரிந்தவர்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.